1973 நவம்பர் 20]

கிடைக்கின்றன என்றும், இவையும் மற்ற மலைகளிலும், மற்ற இடங்களிலும் கிடைக்கும் மூலிகைகள்தான் என்பதால் தனியாக அந்த மலைப்பகுதி சிறப்பு மூலிகைக்குரிய இடம் என்று ஏற்றுக்கொள்ளப்படவில்லை. மேலும் ஏதாவது மூலிகைகள் கிடைத்தால் அதைப்பற்றிப் பரிசீலிக்கலாம்.

டாக்டர் ச. மு. பழனியப்பன்: தலைவரவர்களே, இந்த மூலிகை ஆராய்ச்சியிலே பலன் அதிகம் கிட்டாது என்று சொன்னார்கள், அந்த ஆராய்ச்சியை யார் நடத்தினார்கள்? முறைப்படி அலோபதி மருத்துவர்களால் நடத்தப்பட்டதா அல்லது சித்த வைத்தியர்களால் நடத்தப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இப்படிப்பட்ட ஆராய்ச்சியில் அலோபதி மருத்துவர்களாகயிருந்தாலும், சித்த வைத்தியர்களாக இருந்தாலும், தாவர நூல் அறிஞர் துணை கொண்டே ஈடுபட வேண்டும். 'பொட்டானிகல் சயின்ஸ்'-ல் பயிற்சி பெற்ற, தாவர நூல் பயிற்சி பெற்ற துணைப் பேராசிரியர் பாளையங்கோட்டை மருத்துவக் கல்லூரியில் இருக்கிறார், அவரோடு சித்த மருத்துவர்களும் இணைந்து, கிடைத்த மூலிகைகளைப் பரிசீலித்திருக்கிறார்கள்.

மதுரைக்கு இந்திய முறை மருத்துவ மனை

* 206 வினு—**திரு. நா. வெ. குருசாமி :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாநகரில் பெரிய அளவில் இந்திய முறை மருத்துவ மனை ஒன்று ஆரம்பிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய்விலுள்ளதா ?

(இ) ஆம் எனில், அது குறித்த விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கு பெண் மருத்துவர்கள்

* 207 வினு—**திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழக்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

பிரதம சுகாதார நிலையங்களில் பணியாற்றும் இரு மருத்துவர் பதவிகளுள், ஒரு பதவிக்குப் பெண் மருத்துவரையே நியமிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய்விலுள்ளதா ?